# சந்தோஷம்



பரப்பிரம்ம சற்குரு சித்தர் சுவாமிகளின்

112 ஆவது ஜெயந்தி திருநாள்

# சந்தோஷம்

திருக்கடையூர் அருள்மிகு அமிர்தகடேஸ்வரருக்கு

# 1008 லிட்டர் பால் அபிஷேகம்







சந்தோஷம்

# ஓங்கார ஆசிரமம்

குருர் ப்ரஹ்மா குருர் விஷ்ணு
குருர் தேவோ மஹேச் வரஹ
குருஸ் ஸாக்ஷாத் பரப் பிரம்மா
தஸ்மை ஸ்ரீ குருவே நமஹ !

## விநாயகர் துதி

சித்திதரும் பரகதி உண்டாம் நல்ல செல்வமும் உண்டாம்
புத்திதரும் புகழ் பெருகும் பணிவோர்க்கெல்லாம்
முக்திதரும் திரிபுரை வாலைதனை மொழிந்துரைக்க
வித்தைதரும் வெள்ளை விநாயகர் காப்பதுவே!

## சிவ துதி

உலகெலாம் உணர்ந் தோதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம் !

ஓமெனும் ஓங்காரத்துள்ளே யொருமொழி
ஓமெனும் ஓங்காரத்துள்ளே யுருவரு
ஓமெனும் ஓங்காரத்துள்ளே பலபேதம்
ஓமெனும் ஓங்காரம் ஒண்முத்தி சித்தியே !!

– திருமூலர்.

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே !

– திருஞானசம்பந்தர்.

பெற்ற தாய்தனை மக மறந்தாலும்
பிள்ளையைப் பெறும் தாய் மறந்தாலும்
உற்ற தேகத்தை உயிர் மறந்தாலும்
உயிரை மேவிய உடல் மறந்தாலும்
கற்ற நெஞ்சகம் கலை மறந்தாலும்
கண்கள் நின்றிமைப் பது மறந்தாலும்
நற்ற வத்தவர் உள்ளிருந் தோங்கும்
நமச்சி வாயத்தை நான்மற வேனே !

– திருவருட் பிரகாச வள்ளலார்.

உ

சிவமயம்

# சந்தோஷம்

## பாரதத்தின் க்ஷேமத்திற்காகவும், நன்மைக்காகவும் திருக்கடையூர் அருள்மிகு அபிராமியம்மை சமேத அமிர்தகடேஸ்வரருக்கு 1008 லிட்டர் பால் அபிஷேகம், முப்பெரும் விழா அழைப்பிதழ்

மெய்யன்புடையீர்!

நிகழும் மன்மத ஆண்டு வைகாசி மாதம் முதல் தேதி (15-05-2015) வெள்ளிக்கிழமையன்று உலகப்பேரமைதிக்காகவும், மக்கள் 100 ஆண்டுகள் ஆனந்தமாய் பரிபூரண ஆனந்த வாழ்வு நடத்துவதற்காகவும் ஓங்கார ஆசிரமம் **எட்டாவது உலக மகா பூஜையை** நடத்துகிறது. பாரதம் ஒரு தெய்வீக நாடு. ஆன்மீகப் பொலிவு மிக்க மெய்ஞ்ஞானத் திருநாடு. இது சீரும், சிறப்புடன் வாழ இப்பூஜை 3 நாட்கள் நடைபெறுகிறது. இது ஒரு முப்பெரும் விழாவாகும். சற்குரு சித்தர் சுவாமிகளின் மகா ஆசியாலும், தருமபுரம் 26 ஆவது குரு மகா சந்நிதானம் **ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்** பேராசியுடனும் இத்தெய்வீக நிகழ்வு நடைபெறவுள்ளது.

சுமார் 250 ஆண்டுகளாக ஓங்கார ஆசிரமம் ஞான பரம்பரையாக இயங்கி வருகிறது. மகா குருமகா சந்நிதானம் ஆத்ம நாதர், உயர் மெய்ஞ்ஞான நிஷ்காமிய யோகி தவத்திரு சிவ நாத சிவலிங்கப் பெருமானார், ஜெகமே சிவம் என்று நிர்விகல்ப நிலையில், பிரம்மாண்டமான அருள் சக்தி வாய்ந்த இரத்தின சாமி அடிகளார், மேலும் கடந்த நூற்றாண்டில் சக்தியின் மூல தரிசனம் பெற்று, பதினெண் சித்தர்களைப் பிரத்யட்சமாக தரிசித்து, அவர்களிடம் மெய்ஞ்ஞானப் பாடம் கேட்டு, 4 வேதங்களில் சிறப்புற்று விளங்கி, பதினெண் சித்தர்கள் சித்தாந்தம் பாரதம் முழுவதும் விளங்க, சிவயோக

சித்திகளைப் பெற்ற மகா ஜெகத்குரு அவர்களைப் பாராட்டி மத்திய அரசு பெருமையோடு தபால் தலை வழங்கியது.

சித்தர்களின் திருவடிகளை ஆழ்ந்து சிந்தித்து இன்றைய பெருமைமிகு முப்பெரும் விழா **மகாகுரு சித்தர் சுவாமிகளின் 112 ஆவது ஜெயந்தித் திருநாளில்** எல்லாம்வல்ல பரம்பொருளின் திருவருள் ஆசியால் நடைபெறுகிறது.

1. **1008 லிட்டர் பால் அபிஷேகமும்,** கங்காதேவியும் சிவபெருமானின் சகஸ்ராரப் பகுதியைக் காட்டுகிறது. அருள்மிகு அபிராமி அம்மை சமேத அருள்மிகு அமிர்தகடேஸ்வரர் திரு வடியை ஆழ்ந்து சிந்தித்து அவர்களது திருவருளை சிந்தித்த வண்ணமாய் எல்லோரும் ஆயிரமாயிரம் ஆண்டுகள் வாழ ஆசி வழங்கும் இந்த பெருமைமிக்க திருக்கடையூர் திவ்விய க்ஷேத்திரத்தில் இந்நிகழ்வு நிகழ எங்களை அர்ப்பணித்துள்ளோம்

2. சிவபஞ்சாட்சர ஜெபம் உலகையே துன்பத்திலிருந்து மீட்கின்ற பேராற்றல் படைத்தது. உலகமெல்லாம் ஆன்மநேய ஒருமைப்பாடு விளங்க இந்தியாவில், பாரதத்தில் இருக்கின்ற 12 கோடி மக்களை ஒன்று திரட்டி காலை 6.00 மணிமுதல் மதியம் 1.00 மணிவரை 7 மணி நேரம் சிவமகா பஞ்சாட்சர ஜெபம் நடைபெறுவதற்கான **( எழுபத்தி இரண்டாயிரம் கோடி, 72000 ) ஜப மூல பூஜை நடைபெறும்.** இம்மகா ஜெப வேள்வியினால் பாரதம் சிறப்புற்று விளங்கும்.

3. ஓங்கார ஆசிரமத்தின் புதிய அதிபர் தவத்திரு கோடீஸ்வரானந்தா சுவாமிகள் வரவைப் பற்றிய " இன்று வந்த ஒரு பாரிஜாதம் என்ற தலைப்பில் ஒரு சிறப்பான திருநூல் பெரியவர்களால் வெளியிடப்படவுள்ளது.

தருமையாதீனம் 26-ஆவது குருமகா சந்நிதானம் **ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞான சம்மந்த பரமாசாரிய சுவாமிகள்** ஆணையாலும், நல்லாசியினாலும், கட்டளைத் தம்பிரான், மற்றவர்களும் ஒன்று கூடி இத்தெய்வீக நிகழ்வினைத் திருவினையாக்குவார்கள். ஆகவே சமயப் பெரியோர்கள், சான்றோர்கள், ஆத்ம ஞானிகள், வேதாந்திகள், சித்தாந்திகள், மெய்யன்பர்கள், மற்றும் பொதுமக்கள் அனைவரையும் இந்நிகழ்வுக்கு சிறப்பு செய்ய வருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்பு

தவத்திரு **சுவாமி ஓங்காரநந்தா** அவர்கள்
மகாதிபதி, ஓங்கார ஆசிரமம்.

துறவி ஓம் **லட்சுமிபாய்** அவர்கள்
மூத்த அறங்காவலர் ஞானசித்தர் ஆலயம், புதுப்பட்டினம்.

சிவத்திரு **குமார்ராகவன்** அவர்கள்
Vice President
ஓங்கார ஆசிரமம்

தவத்திரு **சுவாமி கோடீஸ்வரநந்தா** அவர்கள்
அதிபர் ஓங்கார ஆசிரமம்

சிவத்திரு **S. கருணாகரன்** அவர்கள்
அறங்காவலர், ஓங்கார ஆசிரமம்

சிவத்திரு **S. சத்தியநாராயணன்** அவர்கள்
அறங்காவலர், ஓங்கார ஆசிரமம்

---


**வந்துவிட்டது !**
தவத்திரு சுவாமி ஓங்காரநந்தா அவர்களின்
62 ஆவது ஞான நூல்
" விதியே நீ என்னோடு விளையாடவா "
விலை : **ரூ. 200/-**

**படியுங்கள்!**
" ஓங்காரம்" ஆன்மீக மாத இதழ்.
44 ஆண்டுகளாக வந்து கொண்டிருக்கிறது.

## நிகழ்ச்சி நிரல்

**13-05-2015, தவத்திரு சுவாமி ஓங்காரநந்தா அவர்கள்**
சார்பில் 6 திருக்கோயில்களில் மகா அபிஷேகம் நடைபெறும்.

அருள்மிகு கும்பேஸ்வரன் திருக்கோயில் - கும்பகோணம்.
அருள்மிகு மகாலிங்கேஸ்வரர் திருக்கோயில் - திருவிடைமருதூர்.
அருள்மிகு சரபேஸ்வரர் திருக்கோயில் - திருபுவனம்.
அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில் - திருநாகேஸ்வரம்.
அருள்மிகு பசுபதி கோயில் - பாபநாசம்.
அருள்மிகு உமாமகேஸ்வரன் திருக்கோயில் - சீனிவாசநல்லூர்.

நாள் : 14-05-2015
இடம் : சீனிவாநல்லூர், கும்பகோணம்
நேரம் : காலை 5.00 மணிக்கு

சற்குரு சித்தர் சுவாமிகள் அதிஷ்டானத்தில்
இரகசிய பூஜையும் 108 லிட்டர் பால்
அபிஷேகமும் நடைபெறும்.

காலை 6.00 மணிமுதல் - மாலை 7.00 மணிவரை

மகா ஜெப வேள்வி நடைபெறும்

மாலை 7.00 மணிக்கு

மகாகுரு சித்தர் சுவாமிகளின் திருவுருவ ஊர்வலம்
1008 லிங்கங்கள் கொண்ட சகஸ்ரலிங்கத்தின்
முன் உலகப் பேரமைதிக்காகப் பிராத்தனை
மக்களுக்கு ஆசியுரை - பிரசாதம் வழங்கல்

தவத்திரு **சுவாமி ஓங்காரநந்தா** அவர்கள்
மகாதிபதி ஓங்கார ஆசிரமம்.

முன்னிலை வகிப்பவர்

சிவத்திரு **குமார்ராகவன்** அவர்கள்
**Vice President** ஓங்கார ஆசிரமம்.

சற்குருவின் பெருமைகள் : சிறப்புரை வழங்குபவர்கள்

அன்பு நிறை பேராசிரியை

முனைவர் **வேங்கட கலையரசி,** M.A. M.Phil., B.Ed., Phd.,

இணை பேராசிரியர் & தலைவர் ஆங்கிலத்துறை,

அரசினர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி) கும்பகோணம்

சிவத்திரு **குமார்ராகவன்**

Vice President ஓங்கார ஆசிரமம்

திரு. **S. இராமலிங்கம்** ஒன்றிய குழு தலைவர்

முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர்,

திருவிடைமருதூர்.

நிகழ்ச்சிகளை நடத்துபவர்

**ஓம் சர்வாத்மானந்தா குருமகாராஜ்**

அவர்கள், சந்நிதானம், சித்தர் சுவாமிகள்

அதிஷ்டானம், சீனிவாச நல்லூர்.

# 1008 லிட்டர் பாலாபிஷேகம்

காலம் : 15-05-2015 காலை

இடம் : அருள்மிகு அமிர்தகடேஸ்வரர் திருக்கோயில், திருக்கடையூர்.

**1008 லிட்டர் பால் அபிஷேகம்** திருக்கயிலாய பரம்பரை தருமையாதீனத்தின் திருக்கடையூர் ஸ்ரீ அமிர்தகடேஸ்வர சுவாமி தேவஸ்தானம், ஸ்தானீகம், **ஸ்ரீலஸ்ரீ திருஞான சம்மந்த தம்பிரான் சுவாமிகள்,** கட்டளை விசாரணை அவர்கள் முன்னிலையில் ஸ்ரீ அமிர்தகடேஸ்வர சுவாமி தேவஸ்தான மூத்த அர்ச்சகர் சிவஸ்ரீ Dr. T.R. **விஸ்வநாத** குருக்கள் அவர்கள் 1008 லிட்டர் பால் அபிஷேகத்தை நடத்திவைப்பவர்கள் அருள்மிகு அபிராமி அம்மைக்கு 108 லிட்டர் பால் அபிஷேகம் நடைபெறும்.

72000 கோடி ஜெப வேள்விக்கான மூலபூஜை சிவபஞ்சாட்சர ஜெபம் நடைபெறும்.

" இன்று வந்த ஒருபாரிஜாதம்" என்ற திரு நூல் வெளியீடு

**அருளுரைகள்**

**சத்தியம் தர்மம் நியாயம்**

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க

சந்தோஷம்